NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu*, p2
**Date:** 14 December 2020

## நான்கு தன்னாட்சிப் பல்கலைக்கழகங்களின் தங்கும் விடுதிகளில் வசிப்போருக்கு

# ஜனவரியில் இலவச கொவிட்-19 பரிசோதனை

சிங்கப்பூரின் நான்கு தன்னாட்சிப் பல்கலைக்கழகங்களில் உள்ள தங்கும் விடுதிகளில் வசிப்போருக்கு அடுத்த மாதம் கொவிட்-19 நோய்த்தொற்றுப் பரிசோதனை இலவசமாக நடத்தப்படும்.

சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகம், நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம் (என்டியு), சிங்கப்பூர் நிர்வாகப் பல்கலைக்கழகம் (எஸ்எம்யு), சிங்கப்பூர் தொழில்நுட்ப, வடிவமைப்புப் பல்கலைக்கழகம் ஆகியன அந்த நான்கு பல்கலைக்கழகங்கள்.

தங்கும் விடுதிகளில் குடியிருப்போர், சமூகச் சூழலில் வசிப்பதன் காரணமாக சமூக அளவில் நோய் பரவும் அபாயம் இருப்பதால் அவர்களுக்கு கொவிட்-19 நோய்த்தொற்றுப் பரிசோதனை நடத்த முடிவெடுக்கப்பட்டதாக கல்வி அமைச்சு தெரிவித்தது.

அனைத்து பல்கலைக்கழகப் பணியாளர்களுக்கும் மாணவர்களுக்கும் பரிசோதனையை விரிவுபடுத்துவதற்கான திட்டம் எதுவும் தற்போது இல்லை என்று கல்வி அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

ஆனால், தேவை ஏற்படும் பட்சத்தில் எதிர்காலத்தில் அதைச் செய்வது குறித்து கல்வி, சுகாதார அமைச்சுகள் பரிசீலிக்கலாம் என்றார் அவர்.

கொவிட்-19 பரிசோதனை குறித்த மேல்விவரங்கள் மாணவர்களிடம் பகிரப்படும் என்று அப்பேச்சாளர் சொன்னார்.

என்டியுவும் எஸ்எம்யுவும் மாணவர்களுடன் பகிர்ந்த விவரங்களின்படி, ‘ஆன்டிஜன் ரேப்பிட்’ பரிசோதனை பயன்படுத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. அதில் தொற்று உறுதி எனத் தெரியவந்தால், கட்டாய ‘பிசிஆர்’ பரிசோதனை மேற்கொள்ளப்படும்.

‘ஆன்டிஜன் ரேப்பிட்’ பரிசோதனை முடிவுகள் 15 முதல் 30 நிமிடங்களுக்குள் தெரிந்துவிடும். மாறாக ‘பிசிஆர்’ பரிசோதனை முடிவுகள் வெளிவர ஓரிரு நாட்கள் எடுக்கும்.

என்டியு தங்கும் விடுதிகளில் வசிப்போருக்கு ஜனவரி 4 முதல் 15ஆம் தேதி வரை வார நாட்களில் பரிசோதனை நடத்தப்படும். எஸ்எம்யுவின் பிரின்செப் ஸ்திரீட் விடுதியில் வசிப்பவர்களுக்கு ஜனவரி 16, 17 ஆகிய தேதிகளில் பரிசோதனை நடத்தப்படும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட சமூகக் குழுக்களுக்கு கொவிட்-19 பரிசோதனையை விரிவுபடுத்துவதற்கான அரசாங்கத்தின் முயற்சிகளின் ஒரு பகுதியாக இந்த ஏற்பாடு அமைவதாகக் கல்வி அமைச்சு தெரிவித்தது.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.